**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

அ.வ.எண். 172/2014

2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 09-ஆம் நாள் வியாழன் கிழமை பிரதிவாதி **(பி.வா.சா.1)** / தரப்பு சாட்சியின் சாட்சியம்.

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிகளின் படி வள்ளியூர் முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி திருமதி.A.அன்னலெட்சுமி,M.L., அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ராமகிருஷ்ணன் | **சமயம்** | : | |
| **த/பெ** | : | சுப்பையா நாடார் | **வயது** | : | 58 |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | | : | |

**பி.வா.சா. 1 :**

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) 18.11.1981 அன்று அப்போதைய கமிட்டி தலைவராக இருந்த மணி நாடார் 2ம் பிரதிவாதி வழியாக அரசுக்கு பாதையாக எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பாதை 2ம் பிரதிவாதியின் பராமரிப்பில் உள்ளது என்றால் சரிதான். பரிவிரிசூரியன் கிராம புல எண். 143/2 அரசு ஆவணங்களின் படி சர்க்கார் புறம்போக்கு என்று வகைப்படுத்தப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மேற்படி சொத்தானது பணகுடி பேரூராட்சி 1வது வார்டில் உள்ளது என்றால் சரிதான். பாதையை பயன்படுத்திக் கொண்டு அருகில் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். பொதுமக்கள் நலன் கருதி மின்சார இணைப்பு, தெரு பைப்புகள் அந்த பாதை வழியாக கொண்டு செல்லப்படும் என்றால் சரிதான்.

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.07.09 17:11:46 +0530

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வாதி கோவிலின் நிர்வாகி தாசன் என்றால் சரிதான். நிர்வாகி பதவி எத்தனை காலத்திற்கு ஒரு முறை மாற்றம் செய்யப்படும் என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதி கோவில் சீனி நாடார் வகையறாக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். ஆரம்ப காலத்தில் வாதி கோவில் ஓலை கூரையால் வேயப்பட்டிருந்தது என்றால் சரிதான். 26 வருடங்களுக்கு முன்பு மேற்படி கோவில் மட்டப்பாவுடன் கூடிய கட்டடிடம் ஆக மாற்றப்பட்டது என்றால் சரிதான். 1955 ல் சீனி நாடார் என்பவரால் கோவில் அமைவிட பகுதி கோவில் நிர்வாகஸ்தர்களுக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2) கோவிலுக்கு கீழ்ப்பக்கம் உள்ள மனைகள் 1975, 1981, 1995 ம் வருடங்களில் கிரையம் பெற்ற பகுதிகள் என்றால் எனக்கு தெரியாது. வழக்கில் 1 முதல் 4 வரையிலான அயிட்ட சொத்துள்ள என்ன என்று என்னால் கூற முடியும். வழக்கு கோவில் இருக்கக்கூடிய பகுதி எத்தனாவது சொத்தாக கூறப்பட்டிருக்கிறது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. கோவிலை சுற்றி கிழக்கு பக்கம் தவிர்த்து மற்ற பகுதிகளில் மதில் சுவர் உள்ளது என்றால் சரிதான். கோவிலில் இருந்து சப்பரம் கிழக்கே நோக்கி செல்லும் விதமாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் பாதைக்காக ஒரு சொத்து நன்கொடையாக பெறப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் வாதி கோவிலில் வரிதாரர் இல்லை என்றால் சரிதான்.

3) சீனிநாடார் வகையறாவை சேர்ந்த 95 வரிதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கோவிலுக்கு பாத்தியப்பட்ட பாதை கிழக்கு அற்றம் தென்வடல் பாதையுடன் முடிந்து விடுகிறது என்றால் சரிதான். வழக்கில் சொல்லப்பட்டுள்ள பாதை எத்தனை தபசில் சொத்துக்களாக சொல்லப்பட்டிருக்கிறது என்ற விவரம் தெரியுமா என்றால் 3, 4 தபசிலாக வழக்கில் சொல்லப்பட்டிருக்கிறது என்று சாட்சி கூறுகிறார். மேற்படி பாதைக்கு வடபுறமும், தென்புறமும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.09 17:11:50 +0530

4) வீடுகளுக்கு வடபுறமும், வீடுகளுக்கு தென்புறமும் கிழமேலாக தெரு உள்ளது என்றால் சரிதான். பாதைக்கு வடபுறம் உள்ள நபர்கள் அவர்கள் குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகம் வைத்துக்கொண்டார்களா என்றால் சரிதான். அவ்வாறு பாகம் வைத்துக்கொண்டதால் பாதையை பயன்படுத்திக் கொள்ள நாங்கள் அனுமதி கேட்டதன் பேரில் கோவில் நிர்வாகத்தார் 3, 4 தபசில் சொத்தினை அனுபவம் செய்து கொள்ளும் விதத்தில் அனுமதி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அனுமதி 02.04.2014 நாளிட்ட அறிவிப்பின் மூலம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான்.

5) வழக்கில் கண்ட சொத்து கோவில் நிர்வாகத்திற்கு பாத்தியப்பட்டதா அல்லது தனிப்பட்ட நபருக்கு பாத்தியப்பட்டதா என்று உங்களுக்கு தெரியுமா என்றால் அது கோவில் சொத்து கிடையாது தெரு என்று சாட்சி கூறுகிறார். 1981 ல் வழக்கில் கண்ட 2 ம் பிரதிவாதி நன்கொடையின் அடிப்படையில் நான் தெரு என்று சொல்கிறேன் என்றால் சரிதான். 1981 ல் நன்கொடை ஏற்படுவதற்கு முன்பு நிர்வாகஸ்தர்களுக்கு இடையில் கூட்டம் ஏற்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது.

6) நீங்கள் கூறுவது போல் நன்கொடை எழுதிக் கொடுத்த காலத்தில் மணி நாடார் என்பவர் கோவில் நிர்வாகஸ்தராக கிடையாது என்றால் சரியல்ல. மணி நாடார் நிர்வாகஸ்தாரர் என்பவருக்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன், என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சாட்சி கூறுகிறார். சொத்து நன்கொடையின் அடிப்படையில் பஞ்சாயத்தார் அனுபவித்து வருகிறார்கள் என்பதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. உங்களுக்கும், கோவில் நிர்வாகத்திற்கும் இடையே தனிப்பட்ட விரோதம் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.09 17:11:54 +0530

7) நான் கூறுவது போல் 3, 4 தபசில் சொத்துக்கள் பஞ்சாயத்திற்கு பாத்தியப்படுத்தி கொடுக்கப்படவில்லை என்றும், அதுபோல் பஞ்சாயத்தும் 3, 4 தபசில் சொத்துக்களை நிலச்சுவான்தாரராக அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. பணகுடி பஞ்சாயத்தை நான் விசாரிக்க தயாராக உள்ளேனா, என்றால் விசாரிக்க தயாராக உள்ளேன். 3 ம் தபசில் சொத்துக்கள் ஒரு காலத்திலும் பஞ்சாயத்தார் ஒரு காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. 3, 4 தபசில் பொறுத்தமட்டில் நாங்கள் அத்துமீறல்காரர்கள் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான்.

8) நீதிமன்ற ஆணையர் 3, 4 தபசில் சொத்திற்கு சொத்துக்களை பொறுத்து அறிக்கை தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். 2014 வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நீதிமன்றத்தில் தோன்றி உங்கள் நிலைப்பாட்டை சொல்ல முன்வரவில்லை என்றால் சரியல்ல. 3, 4 தபசில் சொத்துக்கள் கோவிலுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட பாதை , அதில் உங்களுக்கு மின்சார வழியோ, தண்ணீர் இணைப்பு வழியோ பெற உரிமை கிடையாது என்றால் சரியல்ல. 3, 4 தபசில் சொத்துகளை தவிர்த்து வேறு பாதைகள் இல்லை என்று காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் வேறு பாதை இல்லை என்றுசாட்சி கூறுகிறார். வாதி வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்க கேட்டு சரியென்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.07.09 17:12:00 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.